
# நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளும்படி எவரையும் அனுமதிக்க வேண்டாம்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுங்கள், அக்டோபர் 5, 1958, காலை, பத்தி எண் 80

80. ஆனால் அவருடைய அமர்ந்த மெல்லிய சத்தத்திற்குச் செவிகொடுங்கள். கிறிஸ்தவர்களாயிருக்க வேண்டும் என்று உரிமைக்கோரும் ஜனங்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் அவருக்கு முன்பாக உங்களை அமைதியாக்கிக் கொள்ளுங்கள். **துவைத்தல் அதற்கு இடையூறாக இருக்க அனுமதிக்க வேண்டாம்.** வேலை அதற்கு இடையூறாக இருக்க அனுமதிக்க வேண்டாம். எதுவுமே அதற்கு இடையூறாக இருக்க அனுமதிக்க வேண்டாம். **நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளும்படி எவரையும் அனுமதிக்க வேண்டாம்.** அப்படியே அவருக்கு முன் செல்லுங்கள். எங்காவது

காடுகளுக்குள் ஏறிச் செல்லுங்கள். சாலையின் பக்கவாட்டில் செல்லுங்கள். அந்தரங்க அறைக்குள்ளாகச் சென்று கதவைத் தாழிட்டுக் கொள்ளுங்கள். **பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லும்போது, அங்கே உங்களுடைய முழங்கால்களை முடக்குங்கள்** (get down). நீங்கள் எல்லா விதமான சத்தங்களையும் எங்கும் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் அப்படியே கீழே முழங்கால்படியிட்டு, அந்தச் சத்தங்கள் அமைதியாக்கப்படுகின்ற வரையிலும் அங்கேயே தரித்திருங்கள், அப்பொழுது நீங்கள் உயரத்துவங்குவீர்கள். அது உங்களை மாற்றும். **அது இந்தக் குட்டி சாமுவேலை வித்தியாசமுள்ளவனாக மாற்றினது போல, உங்களையும் வித்தியாசமுள்ளவர்களாக்கும்.** நீங்கள் இதைச் செய்வீர்களேயானால் அது உங்களுக்கு ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும். இப்பொழுது, அது நீங்கள் என்னவாயிருக்க வேண்டுமோ, அந்நிலைக்கு உங்களையே

உருவாக்கும். அது நீங்கள் எந்தவிதமான கிறிஸ்தவனாயிருக்க வேண்டுமோ, அந்த விதமாக உங்களை உருவாக்கும்.

★★★★★

